**இலங்கை ஹதபிம அதிகாரசபை – 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை ஹதபிம அதிகாரசபையின் (இலங்கை பசுமை குடியிருப்பு நில அபிவிருத்தி அதிகாரசபை) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, இலங்கை ஹதபிம அதிகாரசபையின் (இலங்கை பசுமை குடியிருப்பு நில அபிவிருத்தி அதிகாரசபை) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் அதிகாரசபை

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக அதிகாரசபையின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக ˙கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக அதிகாரசபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச்

சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அதிகாரசபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு முறையாக திட்டமிடப்பட்ட உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

**1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இன் பிரகாரம் காலப்பகுதியில் கையேற்க கூடிய ஆதனங்கள், பொறிகள் மற்றம் உபகரணங்களின் பெறுமதியில் அரசின் மூலதன மானியங்களின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் பெறுமதி மற்றும் பணமாக செலுத்தும் பெறுமதி வெவ்வேறாக காண்பிக்கப்பட்டிக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென | நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 06 இன் 20 மற்றும் 27 ஆம் பந்திகளின் பிரகாரம் ஹதபிம அதிகாரசபை யிடப்பட்டிருந்த விற்பனை செயற்திட்டம் 2019 சனவரி 23 ஆந் திகதி “வரையறுக்கப்பட்ட ஹதபிம கூட்டுறவுச் சங்கம்” என பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் அது வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்ட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென | நியமங்களின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07** | | |
| (i) 42 ஆம் பந்தியின் பிரகாரம் டப்.பீ.எல்ஜீ 8567 ஆம் இலக்க இசுசு லொரி வண்டி 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 3,500,000 இற்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் அதற்காக கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென | நியமங்களின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) 69 ஆம் பந்திக்கு முரணாக 2019 யூன் மாதம் வரையில் இங்கிரியாவில் அமைந்துள்ள பகுதியளவு பூர்த்தி செய்யப்பட்டிருந்த விற்பனைக் கட்டிடம் நடைமுறை வேலைக் கணக்கிற்கு வரவு வைக்கப்படாமல் நிலையான சொத்துக்களின் கீழ் ரூபா 5,568,974 என கணக்கீடு செய்து 2015 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை ரூபா 642,673 பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது. | சொத்தொன்றாக இனங்காணப்பட்டுள்ளதால் கணக்கீடு செய்யப்படுமென | நியமங்களின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ரூபா 51,854,660 தொகையான 16 வாகனங்கள் மீளாய்வாண்டில் ரூபா 47,200,000 இற்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 49,672,134 ஆன திரட்டிய பெறுமானத் தேய்வுப் பெறுமதியில் ரூபா 48,074,634 அகற்றியமையால் ரூபா 1,597,500 திரட்டிய பெறுமானத்தேய்வு கணக்கு கூடுதலாகவும் மீள்மதிப்பீட்டுக் கணக்கு அப்பெறுமதியால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் படுவதாகவும் | மீள் மதிப்பீடு சரி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) நிதி மோசடி காரணமாக கிடைக்க வேண்டிய ரூபா 1,696,741 தொகை காய்கரி கடன்பட்டோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்ப தாகவும் | பொறுப்பான தரப்பினர் இனங்காணப்பட்டு கணக்கீட செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) 1978 ஆண்டு முதல் தொடர்ந்து காணப்படும் ரூபா 1,081,413 ஆன 02 ஒதுக்க மீதிகளை தீர்வு செய்யவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீதிகள் உறுதிப் படுத்துவதற்கு தேவையான தகவல்கள் ஆராயப்படுவதாகவும் | குறித்த ஒதுக்கம் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து அந்த ஒதுக்கத்தை பேணிச்செல்வது அவசியம் இல்லையாயின் அந்த ஒதுக்கீட்டு கணக்கிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக்குழுக்கள் அல்லது அறிக்கை.**

| விடயம் | நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் பெறுமதி | அண்மித்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | வேறுபாடுகள் ஏற்படும் போது வேறுபாடு தொடர்பாக கண்டு பிடித்து சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்ப தாகவும் |
| <u>இலங்கை ஹதபிம அதிகாரசபை</u> | | | | | |
| தேசிய சேமிப்பு வங்கி கண்டி | 1,818,303 | 685,590 | 1,132,713 | சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பதாகவும் | |
| மக்கள் வங்கி பேராதனை | 424,741 | 440,552 | 15,811 | | |
| விற்பனை செயற்திட்டம் | 1,322,520 | 931,309 | 391,211 | | |
| பிரதேச அபிவிருத்தி வங்கி பேராதனை | 500 | 2,058 | 1,558 | | |
| நிலையான வைப்புக்கள் - 12 | 6,203,945 | 5,848,889 | 355,056 | ஏற்றுக்கொள்ளப்பட் டுள்ளது | |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | | |
| 11 ஆம் அத்தியாயத்தின் 3.1 உப பந்தி மற்றும் 5 ஆம் அத்தியாயம் மற்றும் செயற்பாட்டு விதிக்கோயின் 2 ஆம் அத்தியாயம் | 1989 ஆம் ஆண்டு முதல் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பத்திரிகை விளம்பரம் மேற்கொள்ளப்படாமல் விடுவிப்பு அடிப்படையில் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். | அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் நிறைவேற்றுப் பணிப்பாளின் சேவை பெற்றுக்கொள்ளப்பட் டுள்ளது. | வெற்றிடங்கள் பிரசித்தப்படுத் தப்பட்டு ஆட் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 103-110 | மீளாய்வாண்டில் ரூபா 158,910 பெறுமதியான 675 கோழிக்குஞ்சுகள் மரணித்திருந்ததுடன் ரூபா 11,300 நாற்றுக்கள் சேதமடைந்திருந்த போதும் சேதங்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமையொன்று ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 104(2) | பீஜீ-0134 ஆம் இலக்க கெப் வண்டி 2018 திசெம்பர் 18 ஆந் திகதி விபத்திற்குட்பட்டிருந்துடன் அந்நட்டம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கை இடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக | அந்நட்டம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கை இடப்பட வேண்டும் |
| (iii) | நிதிப்பிரமாணம் 396 | அதிகாரசபையின் 02 வங்கிக்கு கணக்குகளில் 06 மாதங்கள் முதல் 04 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்கு முன்னர் போதும் 2018 திசெம்பர் 31 திகதி வரை கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 3,358,718 பெறுமதியான 603 காசோலைகள் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் காசாக்காத காசோலைகளுக்கு நிளைனவூட்டல் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 5,516,879 ஆன பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதனோடெத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 684,332 ஆக இருந்ததுடன் அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 6,201,201 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு விற்பனை நிலையத்தின் இலாபம் 80 சதவீததினால் வீழ்ச்சியடைந்தமை அதிகாரசபையின் நட்டம் 76 சதவீதத்தினால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

(அ) 2017 ஆம் ஆண்டின் போது விற்பனை நிலையத்தின் தேறிய இலாப விகிதம் 3.86 சதவீதமாக இருந்த போதும் 2018 ஆம் ஆண்டில் அவ்விகிதம் 0.80 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

(ஆ) 2017 ஆம் ஆண்டின் கொள்வனவுகளுக்கு விரயத்தின் விகிதம் 2.9 சதவீதம் ஆக இருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டின் போது அது 3.6 சதவீதமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| விற்பனை நிலையத்திற்கு ஹதபிம அதிகாரசபை யிடமிருந்து கிடைக்க வேண்டிய கடன் மீதி மற்றும் விற்பனை நிலையத்திற்கு செலுத்த வேண்டிய கடன் மீதிகளுக்கு இடையே 02 ஆண்டு காலமாக ரூபா 781,946 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென. | முறையான கண்காணிப்புடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஹதபிம அதிகார சபையில் இருந்து ரூபா 54,912,000 தொகை கிடைக்க வேண்டியவை என காட்டப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய மீதியொன்று அல்லாமல் அதிகாரசபைக்கு பெற வேண்டிய மீதியாக ரூபா 2,094,280 தொகை என காட்டப்பட்டிருந்தது. | பதிவேடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு பரிந்துரை கிடைத்துள்ளதுடன் அது அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது விற்பனை பிரிவின் விற்பனை நவடிக்கைகளுக்காக கொள்வனவு செய்யப்படாத கொள்வனவிற்காக ரூபா 1,696,741 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்கு பொறுப்பான தரப்பினரிடமிருந்து ரூபா 575,000 அறவிடப்பட்டு அறவிடப்பட்ட அத்தொகை ஹதபிம அதிகாரசபையின் இறுதிக் கணக்குகளில் விற்பனை பிரிவிற்கு செலுத்த வேண்டிய பணமாக குறிப்பிடப்பட்டிருந்தது. அறவிட வேண்டிய முழுத்தொகையான ரூபா 1,696,741 தொகை விற்பனை பிரிவின் கடன்பட்டோர் மீதியின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் 05 ஆண்டுகள் கடந்திரந்த போதும் குறித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக எடுத்த நடவடிக்கைகள் அல்லது எஞ்சிய பணத்தை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டரீதியான நடவடிக்கை காரணமாக தேறிய பெறுமதி சீராக்கம் செய்யாமல் அறவிடப்பட்ட தொகை அதிகாரசபையின் கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ளதாக | நிதிக்கூற்றுக்களில் சரியாக வெளிப்படுத்த வேண்டியதுடன் அறவிடப்பட வேண்டிய தொகையை விரைவில் அறவிட வேண்டும். |

### 3.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஆண்டின் போது ரூபா 5,999,835 தொகை செலவிடப்பட்டு அரைப்பங்கு முடிவடைந்த விற்பனை நிலையம் அமைந்துள்ள காணியை பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. | திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்துறை பயிற்சி அமைச்சின் கீழ் உள்ள இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபைக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக | சொத்துக்களை நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகளுக்கு பயன்படுத்துவதற்கோ அல்லது தேவைப் படாவிட்டால் முறைப்படி கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் ஆகக் குறைந்தது 03 ஆண்டு காலப்பகுதிக்காக பிரதான பெறுகை திட்டமொன்று 2019 சனவரி 30 ஆந் திகதி வரை தயாரித்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதாக | வழிகாட்டலின் பிரகாரம் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) பெறுகை திட்டத்தின் பிரகாரம் பொதியிடல் பொருட்களுக்காக ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்து உள்ளவாறான செலவினம் 213 சதவீதமான அசாதாரன பெறுமதியொன்றாகும். | விலை அதிகரித்தமையால் செலவினம் அதிகரித்தது. | பெறுகை திட்டம் காலரீதியாக மதிப்பீடு செய்யப்பட்டு தேவையான திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 ஏனைய அமைப்புக்களின் வளங்களின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வேறு நிறுவனமொன்றிடமிருந்த ரூபா 156,750,000 பெறுமதியான மற்றும் பெறுமதி சமர்ப்பிக்கப்படாத 02 காணி பிரிவுகள் மற்றும் கட்டிடமொன்றும் முறையாக கையேற்காமல் அதிகாரசபை யினால் நீண்டகாலம் பய்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டு அறிக்கை கிடைக்காமல் இருந்ததுடன் தற்காலிக அடிப்படையில் பயன்படுத்தப்படுகின்றது. | முறைப்படி கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.6 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினருக்கு இடையே அதிகாரசபையில் 08 பதவிகளில் 11 வெற்றிடங்களும் விற்பனை செயற்திட்டத்தில் 02 பதவிகளில் 05 வெற்றிடங்களும் காணப்பட்ட போதிலும் அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அங்கீகாரம் கிடைத்தவுடன் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுவதாக | வெற்றிடங்களை நிரப்பவுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) விற்பனை பிரிவிற்காக வெற்றிடங்கள் பிரசித்தப்படுத்தப்படுத்தாமல் 2018 ஆம் ஆண்டில் 03 பதவிகளுக்காக 20 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். | கூட்டுறவுச் சங்கமொன்றாக பதிவுசெய்யப்பட்ட காரணத்தினால் எதிர்காலத்தில் இவ்வாறான சிக்கல்கள் ஏற்பவதில்லையென | முறையான நடைமுறையொன்று ஏற்படுத்தப்பட வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த அறிக்கைகள் சபையில் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| பொது முயற்சிகள் பணிப்பாளரின் 2003 ஜுன் 02 ஆந் திகதிய 12 இலக்க சுற்றறிக்கையின் 6.5.3 பந்தியின் பிரகாரம் வருடாந்த இறுதியாக கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் 2015 ஆம் ஆண்டு முதல் 2017 வரையான ஆண்டறிக்கை 2019 ஆகஸ்ட் மாதம் அளவிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2015, 2016 ஆம் ஆண்டுகளின் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன 2017 ஆம் ஆண்டின் வரைவு ஆண்டறிக்கையும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | உரிய காலப்பகுதியில் பாராளுமன்றத்தில் முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 06 மீண்டெழும் செலவினங் களுக்கு உரித்தாக 13 சதவீதம் முதல் 109 சதவீதம் வரையான மதிப்பீட்டு மிகைத்தமைக்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்வதாக | உரிய அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க் வேண்டும். |

### 4.3 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| பொது முயற்சிகள் பணிப்பாளரின் 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 இலக்க சுற்றறிக்கையின் 7.4.1 பந்தியின் பிரகாரம் 02 கணக்காய்வு குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமையொன்ற ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுப்பதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4.4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் ஆண்டிற்குரிய அதிகாரசபையினால் 05 நிலைபேறான நோக்கங்களுக்கு கவனம் செலுத்தியிருந்ததுடன் அது தொடர்பான இலக்கிடப்பட்ட அடிப்படை தரவு, இலக்கினை அடையப்பட வேண்டிய அடைவுகள் உட்பட செயன்முன்னேற்றத்தை அளவிடுவதற்காக குறிகாட்டிகளை இனங்காண நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | குறிகாட்டிகளை இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |